# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

**Tamil Study Centre - Mount Druitt**

*Mobile: 0449 892 066*

*Email :mtdruitttsc@gmail.com* *Web : www.mtsc.org.au*

# ஆண்டு 9 – பேச்சுப் போட்டி 2019

பேச்சுப் போட்டி எதிர்வரும் **01.06.2019** அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.



அனைவருக்கும் என் இனிய வணக்கம் !

**“தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா”** என எத்தனை தடவை சொன்னாலும் பரவாயில்லை அத்தனை பெருமையும் நமக்கே உரியது.

தமிழுக்கு வளம் சேர்க்கும் சுவைமிகு நம் இலக்கியங்கள் மிகப்பழைமையானவை! தொண்ணூற்றி ஒன்பதாயிரத்து முந்நூறு (99,300) வருடங்களுக்கு முன் தமிழ்ச் சங்கங்கள் இயங்கிய அந்த கால கட்டத்தில் தான் பரிபாடல், தொல்காப்பியம், அறநானூறு, புறநானூறு, நாலடியார், திருக்குறள் போன்ற தமிழ் இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. இதைப்போன்ற இலக்கியங்கள் வேறு எந்த மொழியிலும் கிடையவே கிடையாது.



திருக்குறள் – பல நூறு மொழிகளில் உலகம் முழுக்க இன்று வலம் வந்து கொண்டிருக்கின்றது. இதனால் தான் “என்ன தவம் நான் செய்தேன் தமிழனாக பிறப்பதற்கு” என்று பாரதியார் பெருமிதம் கொண்டாரோ?. “திருக்குறளை படிக்க நான் தமிழனாக பிறக்கவில்லையே” என மகாத்மா காந்தி மனம் ஏங்கினார். புத்தர் கூட தமிழ் இலக்கியம் படிக்க ஆசைப்பட்டார் என்று ‘ரத்ன விகாரம்’ என்ற சமஸ்கிருத நூல் சொல்கின்றதே! ஆஹா! எத்தனை எத்தனை பெருமை நம் தமிழுக்கு.

**“தமிழன் என்று சொல்லடா**

**தலை நிமிர்ந்து நில்லடா”**

தமிழ் மொழியின் வளம், இனிமை கூட வேறு எந்த மொழியிலும் இல்லை, இல்லவே இல்லை. ‘அம்மா’ – இது குழந்தையின் முதல் வார்த்தை. இதில் ‘அ’ உயிரெழுத்து, ‘ம்’ மெய் எழுத்து, ‘மா’ உயிர்மெய் எழுத்து. எத்தனை அழகான சொல் ஆக்கம் பார்த்தீர்களா?

செந்தழிழை விட, செறிவு, சொல்வளம், எக்கருத்தையும் வெளியிடும் ஆற்றல், இனிமை ஆகிய வளங்களை கொண்ட மொழி வேறு எதுவும் கிடையாது என்று அமெரிக்காவை சேர்ந்த றிவோர்ட் ஹரி கவுற்றன் **(Reword Harry Hourton)** என்ற ஆய்வாளர் நம் தமிழுக்கு புகழ் ஆரம் சூட்டியுள்ளார்.

எனவே **“தமிழன் என்று சொல்லடா**

**தலை நிமிர்ந்து நில்லடா”**

நன்றி,

வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திரு. சாமித்தம்பி  கனகசிங்கம்.